**செய்தி வெளியீடு எண் : 315** **நாள் : 15.02.2023**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில்பாலாஜி அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள வீடு, கைத்தறி, விசைத்தறி, குடிசை மற்றும் விவசாய மின் இணைப்புதாரர்கள் தங்களது மின் இணைப்பு எண்ணினை ஆதாருடன் இணைப்பது தொடர்பாக செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில்பாலாஜி அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள வீடு, கைத்தறி, விசைத்தறி, குடிசை மற்றும் விவசாய மின் இணைப்புதாரர்கள் தங்களது மின் இணைப்பு எண்ணினை ஆதாருடன் இணைப்பது சம்பந்தமாக இன்று (15.02.2023) செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது.

தமிழ்நாட்டில் உள்ள வீடு, கைத்தறி, விசைத்தறி, குடிசை மற்றும் விவசாய மின் இணைப்புதாரர்கள் மின் இணைப்பு எண்ணை அவர்களது ஆதாருடன் இணைக்கும் பணியானது ஒன்றிய அரசின் ஒப்புதலுடன் தமிழக அரசின் மின் ஆளுமை முகமையின் அனுமதி பெற்று தமிழ்நாட்டில் உள்ள வீடு, கைத்தறி, விசைத்தறி, குடிசை மற்றும் விவசாய மின் இணைப்புதாரர்களின் மின் இணைப்பு எண்ணை அவர்களது ஆதாருடன் இணைக்கும் பணியானது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் 15.11.2022 முதல் Online மூலமாகவும், 28.11.2022 முதல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 2,811

பிரிவு அலுவலகங்களிலும் சிறப்பு கவுண்டர்கள் மூலமாகவும் ஆதார் எண்ணை இணைப்பதற்கான பணிகள் துவக்கி வைக்கப்பட்டன.

பணிகளை முடிப்பதற்கு முதற்கட்டமாக 31.12.2022 வரை காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது. பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க காலக்கெடுவானது 31.01.2023 வரை நீட்டிக்கப்பட்டது. ஜனவரி 2023 ஆம் மாதத்தில் தைப்பொங்கல் உள்ளிட்ட விடுமுறை நாட்கள் அதிகம் இருந்ததால், 15.02.2023 வரை மின் இணைப்பு எண்ணை ஆதாருடன் இணைப்பதற்கு இறுதியாக காலநீட்டிப்பு செய்யப்பட்டது.

தொடங்கிய நாள் முதல் இன்று 15.02.2023 நண்பகல் 01.00 மணி வரை 260.58 இலட்சம் மின் நுகர்வோர்கள் தங்களது மின் இணைப்பு எண்ணை ஆதாருடன் இணைத்திருக்கிறார்கள். இது மொத்தமுள்ள 267.79 இலட்சம் மின் நுகர்வோர்களில் 97.31 சதவீதம் ஆகும். மீதம் உள்ள 7.21 இலட்சம் (2.69 சதவீதம்) மின் நுகர்வோர்கள் அவர்களது மின் இணைப்பு எண்ணை ஆதார் எண்ணுடன் இணைக்கவில்லை.

இதுவரை தமிழ்நாட்டில் ஆதார் எண்ணை மின் இணைப்புடன் இணைத்த மின் இணைப்புகளின் விவரம்:

| | | |
|---|---|---|
| 1. | வீட்டு மின் இணைப்புகள் | : 227.58 இலட்சம் (97.72%) |
| 2. | கைத்தறி மின் இணைப்புகள் | : 0.73 இலட்சம் (98.66%) |
| 3. | விசைத்தறி மின் இணைப்புகள் | : 1.60 இலட்சம் (98.42%) |
| 4. | குடிசை மின் இணைப்புகள் | : 8.42 இலட்சம் (91.05%) |
| 5. | விவசாய மின் இணைப்புகள் | : 22.25 இலட்சம் (95.57%) |
| | மொத்தம் | : 260.58 இலட்சம் |

மீதமுள்ள பொதுமக்களும் தங்களது ஆதார் எண்களை மின் இணைப்பு எண்ணுடன் இணைப்பதற்காக வருகின்ற 28.02.2023 வரை காலக்கெடு இறுதியாக நீட்டிக்கப்படுகிறது.

பொதுமக்கள் அனைவரும் இந்த கால நீட்டிப்பு அவகாசத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் ஈரோட்டில் பத்திரிகையாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in